

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624

# கௌரவக் கொலைகள் – சமூகத்திற்கும் சமூக நீதிக்கும் விடப்பட்ட சவால்கள் சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

அ.எண்: 54/2016
தேதி : 15.03.2016

சமீப காலங்களில் சாதி மறுப்புக் காதல் திருமணம் செய்து கொள்ளும் இளம் தம்பதியினர் கௌரவக் கொலை என்ற பெயரில் பலியாகி வருவது அதிர்ச்சியும் வேதனையும் அளிப்பதாக உள்ளது.

இயக்கங்களிலும் இதிகாசங்களிலும் பேசப்படும் காதலை ஏற்றுக் கொண்ட சமூகம், நிஜ வாழ்க்கையில், யதார்த்தத்தில் காதலுக்குக் கடிவாளம் போட நினைப்பது பண்பாட்டின் முரண்பாடு.

சாதி உணர்வு, சாதி வெறியாகிப் புரையோடிப் போயிருக்கும் சமூகத்தில், சாதி மறுப்புக் காதல் திருமணங்கள் சாதி வெறியின் தாக்கத்தைக் குறைக்க உதவும் என்ற அடிப்படையில் சாதி மறுப்புத் திருமணங்களை, காதல் திருமணங்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பது பெரும்பாலோரின் விருப்பம். ஆனால் இந்திய சமூகத்தின் அடிப்படையான குடும்ப அமைப்பு, உறவுகளுக்கிடையே அன்பு, பாசம், உணர்வுப் பூர்வமான பிணைப்பு இவற்றையெல்லாம் மீறி சாதி உணர்ச்சி ஈன்று புறந்தந்த தமது செல்வங்களைப் பலியிடவும் துணிகிறது என்றால் சாதியத்தின் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது என்பது புலனாகிறது.

கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், நாகரிகம் என்று பல்வேறு வளர்ச்சிகளை சமூகம் கொண்டிருந்தாலும், கௌரவக் கொலைகள் நடப்பதைப் பார்க்கும்போது இன்னும் சில மனித மனங்கள் கற்காலத்தை விட்டுத் தாண்டாமல் இருப்பது வேதனை கலந்த உண்மை.

ஏழை – பணக்காரன், படித்தவர் – படிக்காதவர், கிராமம் – நகரம் என்று எந்தவிதப் பாகுபாடும் இல்லாமல் கௌரவக் கொலைகள் நடந்தேறி வருவது

சமூகத்திற்கும், சமூக நீதிக்கும் விடப்பட்ட சவால்கள் என்றே நான் கருதுகிறேன்.

ஒருவரின் திருமண சுதந்திரத்தில் மற்றவர்கள் தலையிடுதல் என்ற வகையிலும், பெண்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பு என்ற வகையிலும், கௌரவக் கொலைகள் என்ற கொடுமைகள் தடுக்கப்படவும், தண்டிக்கப்படவும் வேண்டும்.

இன்றைக்குச் செய்யப்படும் கௌரவக் கொலையால் பல தலைமுறைகளுக்கும் ஒரு குடும்பத்தின் கௌரவம் குலைந்து விடும் என்ற உண்மை ஏன் பெற்றவர்களுக்குத் தெரியவில்லை? கொலைக்கு ‘கௌரவம்’ என்ற பட்டம் கொடுத்து விட்டு, குடும்பம்- குடும்பம் சார்ந்த சமூகம் – சமூகம் சார்ந்த தேசம் இவற்றின் ஒட்டுமொத்த கௌரவம் அவமானப்பட விடக்கூடாது.

காதல் என்ற போர்வையில் பெண்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுமேயானால் அது சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டுமே தவிர, தனி நபர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அதே வேளை, சாதி மறுப்புக் காதல் திருமணங்கள் செய்து கொள்பவர்களுக்கு தகுந்த பாதுகாப்புச் சட்டம் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கிறேன்.

21 மாநிலங்கள், தங்கள் மாநிலங்களில் கௌரவக் கொலைகள் நடந்து வருவதை உச்சநீதி மன்றத்தில் ஒப்புக் கொண்டிருக்கும் நிலையில், தேசிய அளவில் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும்.

சாதி உணர்வு என்பது சாதி வெறியாக மாறி மனித உறவுகளுக்கும், உயிர்களுக்கும் தீங்கு விளைவிப்பதாக அமைந்து விடக்கூடாது. எனவே இளைஞர்களும், சமூக அமைப்புகளும், அரசியல் தலைவர்களும், தன்னார்வலர்களும் சாதிக் கொடுமைகள் தொடராதிருக்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முன் வர வேண்டும். வருங்கால சந்ததியினர் சாதியக் கொடுமைகளில் சிக்காமல் வாழ்வதற்கு வழி கண்டிட வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்